# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No. 577/2023

## PW: 9

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.அய்யப்பன் | Occupation: | கொத்தனார் |
| Father's Name : | திரு.சிவசாமி | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 30 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 06th day of November 2024.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டிற்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். அ.சா.1 அய்யப்பனை எனக்கு தெரியும். அவர் எனது மைத்துனர். சம்பவம் நடந்தபோது நான் ஊரில் இல்லை. சுமார் ஒன்னரை வருடங்களுக்கு முன்பாக ஒரு ஞாயிற்று கிழமை நான் ஊரில் இல்லை. பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 அய்யப்பனுக்கும் இடையே பிரச்சனை என்று கூறினார்கள். அய்யப்பனுக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

போலீசார் என்னை விசாரித்தார்கள். அடிப்பட்ட அஜீத் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(சாட்சி தனது குவிமுச 161 வாக்குமூலத்திலிருந்து பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையின்போது கடந்த 17.09.2021 அன்று இரவு 9.00 மணிக்கு நான் என் வீட்டு வாசலில் நின்றுக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது எதிரி ராஜ்குமார், ஜெயக்குமார் வீட்டின் முன்பு நின்று அ.சா.1 அய்யப்பன் தேனாம்படுகை வருவதற்காக உடையாளூர் மெயின்ரோட்டில் உள்ள 3 ஸ்டார் மளிகை கடை முன்பாக நின்றுக் கொண்டிருந்த தனது மைத்துனர் அஜீத் என்பவரிடம் தனது இருச்சக்கர வாகனத்தை கொடுத்து பட்டீஸ்வரம் கடைத்தெருவிற்கு சென்று ஸ்வீட் வாங்கி வர அனுப்பியதாகவும், அஜீத் வண்டியை ஸ்டார்ட் செய்தபோது வண்டி ஆக்சிலேட்டர் சரியில்லாததால் வண்டி உறுமிக் கொண்டு சத்தமாக இருந்ததை பார்த்து அங்கு நின்றுக் கொண்டிருந்த எதிரி என்னை பார்த்ததும் வண்டியை உறுமுகிறாயா என்று கேட்டு தகாத வார்த்தைகளால் அஜீத் கையால் கன்னத்தில் அடித்தும், பின்பு கம்பை எடுத்து அஜீத்தை அடித்துள்ளார் என்றும், மேலும் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் அஜீத்தின் தலையில் 3 இடங்களில் வெட்டினார் என்றும், அப்போது ஜெயக்குமார் தகராறு செய்தது பற்றி கேட்டபோது எதிரி ராஜ்குமார் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் ஜெயக்குமாரின் தலையில் அடித்து காயம்

ஏற்படுத்தினார் என்றும் அஜீத், அய்யப்பன், ஜெயக்குமார் 3 பேரும் சத்தம் போட்டதால் தெருவில் உள்ளவர்கள் வந்து விட்டார்கள் என்றும், எதிரி ராஜ்குமார் அங்கிருந்து கையில் இருந்த அருவாளை காட்டி கொலை மிரட்டல் செய்து விட்டு போய் விட்டார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு சம்பவத்தை நேரில் பார்த்து விட்டும், தற்போது எதிரியை தெரியும் என்பதாலும், பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்பதாலும், அவருக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.11.06 15:03:21 +0530

*Chief Judicial Magistrate,*

Thanjavur at Kumbakonam.